கொல்லநுலையின்

# பத்திரம்

விதையிலிருந்து விருட்சத்தை நோக்கி

விதை 02 விருட்சம் 03 விகாரி வருடம் ஆனி மாதம் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (16.06.2019)


இணைப்பாட விதான செயற்பாடுகள் நடைபெறாத பாடசாலைகள் இறந்த பாடசாலைகள்

# சாதனைகளை நிலைநாட்டும் பாடசாலையாக கொல்லநுலை!

**வலயக்கல்விப் பணிப்பாளர்.சி.சிறீதரன் தெரிவிப்பு**



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் அமைந்துள்ள கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம் அண்மைக்காலங்களாக பல சாதனைகளை புரிந்து வருகின்றதென மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

கொல்லநுலைப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற நாட்டிற்காக ஒன்றிணைவோம் நிகழ்ச்சித்திட்டத்தின் யோகாசன நிகழ்வு பாடசாலையில் நடைபெற்ற போதே இதனைக்குறிப்பிட்டார்.

வலயக்கல்விப் பணிப்பாளர் மேலும் உரையாற்றுகையில்,

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட 67பாடசாலைகளிலும், ஜனாதிபதியின் நாட்டிற்காக ஒன்றிணைவோம் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வேலைத்திட்டங்களில் ஒன்றாக கொல்லநுலைப பாடசாலையில் முன்னெடுக்கப்படும் யோகாசனப்பயிற்சியும் அமைந்துள்ளது.

4ம் பக்கம் பார்க்க

## கொல்லநுலை இளைஞர் கழகம் தேசியமட்ட போட்டிக்கு தெரிவு

4ம் பக்கம் பார்க்க

## கிராமத்து வீதி

2ம் பக்கம் பார்க்க



எப்போதும் விரிந்து மலர்ந்துகொண்டே இருப்பதுதான் வாழ்க்கையாகும். சுருங்கிவிடுவது மரணம்தான். தன்னுடைய சொந்த சுக வசதிகளை மட்டும் கவனித்துக்கொண்டு, சோம்பல் வாழ்க்கை வாழும் சுயநலக்காரனுக்கு நரகத்திலுங்கூட இடம் கிடைக்காது.

## வரவினை அதிகரிப்பதற்கும், மகிழ்ச்சியான செயற்பாட்டுக்குமாக பட்டமிடும் நிகழ்வு!



மாணவர்களது வரவினை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும் மாணவர்களை மகிழ்ச்சி கொள்ள செய்வதனையும் நோக்காக கொண்டு பட்டமிடும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றதென கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தின் அதிபர் சா.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

## மொழித்திறனில் பின்னடைவான மாணவர்களுக்கான பரிகாரக்கற்பித்தல் உத்திகள்

7ம் பக்கம் பார்க்க

## தலைகுனிந்த நாள்!

6ம் பக்கம் பார்க்க

கொல்லநுலையின்

# பற்றியம்

விதையிலிருந்து விருட்சத்தை நோக்கி

ஞாயிற்றுக்கிழமை, 2019.06.16
கொல்லநுலை, கொக்கட்டிச்சோலை
மின்னஞ்சல் : kollanulaivv@gmail.com
www.kollanulaivv.blogspot.com


பற்றியம் சஞ்சிகையின் 5வது இதழில் சந்திப்பதினையிட்டு அகமகிழ்கின்றேன். நூலகமொன்று திறக்கப்பட்டால் சிறைச்சாலைகள் மூடப்படும் எனக்கூறுவார்கள். அதற்கமைய தற்காலத்தில் உள்ள மாணவர் சமுகம் நூல்களை வாசிப்பதில் ஆர்வம் செலுத்துக்கின்றமை மிகக்குறைவே. எதையும் சுருக்கமாவே அறிய முனையும் காரணத்தினால் இன்றைய மாணவர்களின் தேடல் பரப்பும் குறைந்து செல்கின்றமை வேதனையே. இதனால் வாசிகசாலைகளில் வாசிப்போர் வீதம் குறைவாக இருப்பதனை நோக்கமுடிவதுடன், பல புத்தகங்கள் புரட்டப்படாமலே அடுக்கப்பட்டும் உள்ளன. பல்வேறு தேடல்களின் விளைவினால் வெளிவரும் புத்தகங்களை வாசிக்க தற்கால இளைஞர்கள் தவறிழைக்கின்ற அதேவேளையில், பெரும் நூலகமாக இருக்ககூடிய முதியோர்களிடமிருந்து பெறக்கூடிய அனுபவவாயிலான விடயங்களையும் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதும் வரலாறுகள் அழிந்து செல்வதற்கான ஆரம்பமே. இந்நிலைமையினை கருத்தில் கொண்டு இளம்சந்ததியினர் தேடலை அதிகரிப்பதுடன், நூல்களை வாசிப்பதிலும், வெளியீடு செய்வதிலும், ஆக்கங்களை படைப்பதிலும் அதிக ஆர்வம் செலுத்த வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு பற்றியம் என்றும் துணைநிற்கும்.

**என்றும்**
**பற்றியம் ஆசிரியர்**
**திரு.வ.துசாந்தன்.**

## சிறுகதை

# கிராமத்து வீதி

என் கிராமத்தை ஒரு இருள் மூடியதாய் உணர்கின்றேன். அதிகாலையில் கொட்டும் பனியின் நிமிர்த்தமாக புல் பூண்டுகள் எல்லாம் பனியில் நீராடி நீர் துளிகளை தன் தலையில் சுமந்து கொண்டு நின்றன. பறவைகளின் இனிய கீதம் என் செவியை அடைகின்றது. வழமைபோன்று நான் பாடசாலை செல்ல தயாராகின்றேன். புதுமுகம் காட்டி புன்னகையுடன் பூத்து குலுங்கும் புதிய மலர்களை காண்கின்றேன். அகம் குளிந்து ஆண்டவனின் அருள் பெற அழகான மலர்களை ஆராய்ந்து பறித்து புனித கடவுளுக்கு சூட்டி புத்துயிர் பெறுகின்றேன்.

காலை உணவு உண்டு கண்ணியமாய் தாயின் ஆசிபெற்று பாடசாலை செல்கின்றேன். ஒரு வழிப்பாதையின் ஊடாக எனது சைக்கிள் உன்னிப்பாக செல்கின்றது. வழியில் இருபுறமும் பச்சை கம்பளமாய் மரங்களும் புற்களும் இருக்கின்றன. நான் போய்கொண்டிருக்கும் ஒரு வழிப்பாதையின் முன்னரே ஒரு சிறு பையன் புத்தகப்பையை சுமந்தவாறு கையில் சிறு குச்சியுடன் அந்த குச்சியை சுற்றியவாறே சென்று கொண்டிருப்பது என் கண்களுக்கு புலப்பட்டது. அந்த சிறுவனின் அருகே சென்று பார்த்தேன். அவன் என் பக்கத்துவிட்டு பையன் ராகுல். அட்டம்பக்கம் பார்த்தவாறே சென்றுகொண்டிருந்த ராகுவைப் பார்த்து என்ன ராகு தனியாக போகின்றாய். உன்னிடம் வரும் ஏனைய பிள்ளைகள் எங்கே என்றேன்? ராகு என்னைப் பார்த்து சொன்னான். அக்கா அவனுகள் எல்லாம் இன்னும் வரலல. நான் நேரத்தோடு வந்திட்டன் என்றான்.

நடையில் வந்த ராகுவை நான் என்னுடைய சைக்கிளில் ஏற்றிக்கொண்டேன். எங்கள் பயணம் பாடசாலையை நோக்கி தொடர்ந்தது. குளக்கரையைத் தாண்டி செம்மணல் பாதையை அடைந்தோம். பாதையின் அருகே அடர்ந்து விரிந்து விழுது பரப்பி நிற்கும் ஆலமரத்தின் கீழ் ராகுவின் மாமா நின்றுக்கொண்டிருந்ததை கண்டோம். எங்களை கண்ட ராகுவின் மாமா கடவுளே இந்த பள்ளிப்பிள்ளைகள் எல்லாம் உடைந்த வழியில எப்படிதான் பள்ளிக்கு போகுதுகளோ தெரியல்ல. என முணுமுணுத்த வண்ணம் எங்களைப் பார்த்தான்.

ராகு என்ன மாமா இங்க நிக்கீங்க என்றான். ஓ என்ட மகன பள்ளிக்கூடத்திற்கு கொண்டு விட்டுத்து வாரன் என்றார். ராகுவின் மாமா எங்களிடம் கேட்கின்றார். “என்ன புள்ளங்கள் உங்களுக்கு இந்த வழியால செல்றது கஸ்டமா இல்லையா?” என அதற்கு நான் சொன்னேன் என்ன செய்வது கஸ்டமாகத்தான் உள்ளது. எப்படியாவது பாடசாலைக்கு சென்றுதானே ஆக வேண்டும் என்றேன். ஆம் அதுவும் சரிதான். இப்பெல்லாம் நம்ம ஊர்போல கஸ்டமான வசதிகள் குறைந்த ஊர்ப்பக்கம் படிக்கிற புள்ளங்கள் தான் இப்போ நல்ல முறையில் படிச்சு அரசாங்க வேலைகளை எடுக்குதுகள் அதுபோலதான் நம்ம ஊரிலையும் இப்ப படிக்கிற உங்கள மாதிரி பிள்ளைகள் நல்லாப்படிச்சு குடத்திற்குள் விளக்கு போல இருக்கும் நம்ம ஊர வெளியூர் ஆட்கள் எல்லாரும் அறியும்படி பெரியயொரு சாதனை செய்யனும் என்றார் ரகுவின் மாமா. அவர் கூறிய அறிவுரைகள் எனக்கு என் ஊரை ஒரு நல்ல முறையில் ஒரு கல்வியறிவு கூடியதொரு ஊராக மாற்ற வேண்டும் என்ற என் சிந்தனையை மேலும் மெருகூட்டியது. சரி மாமா எங்களுக்கு நேரம் போகிறது. நாங்க பள்ளிக்கு போறம் என ராகு கூறினான்.

ராகுவின் மாமா சரிபோங்கோ என்று கூறிக்கொண்டு அவரும் புறப்பட்டார். ராகுவும் நானும் தொடர்ந்து சென்று கொண்டிருந்தோம். சிறிது தூரம் போனதும் எங்கள் பயணம் தடைப்பட்டு விட்டது. பாதையின் நிலைமை காரணமாக நாங்கள் சைக்கிளைவிட்டு இறங்கி சைக்கிளை தள்ளியவாறு நடந்து சென்றோம் சற்று முன் அவ்வாறே சென்ற பொழுது முன்புள்ள பாதையினால் செல்லவே முடியாது. ஒருபக்கம் பெரிய கற்களும் மறுபக்கம் கறுப்பு நிறமுள்ள தண்ணீருமாக அந்த உடைந்த பாதை காட்சியளித்தது. உடைந்த பாதையை விட்டு பாதையின் அருகே உள்ள வயலின் வரம்பில் ஒன்றில்தான் ஏறிச்சென்று வரம்பின் முடிவில் இறங்கி பாதை வழியின் ஊடாக செல்ல வேண்டும்.

சொல்லப்போனால் அவ்வுடைந்த வீதியை விடவும் அவ்வரம்பு பறவாயில்லை என்றுதான் கூற வேண்டும் அவ்வாறே நானும் ராகுவும் வரம்பில் மேல் ஏறினோம். ராகு என்னிடம் ஒன்று கூறினான் அது எனக்கு புதிய யோசனையாகவிருந்தது. ராகு அவ்வீதியின் அருகே உள்ள நாங்கள் ஏறிச்செல்லும் வரம்பினை அதிவேக நெடுஞ்சாலை என்றான். ஏன் அப்படி கூறுகிறாய் எனக்கேட்டேன் அதற்கு அவன் கொழும்பு போன்ற பெரிய நகரங்களில் எல்லாம் அங்குள்ள வீதிகளில் எல்லாவற்றிலும் மிகவும் வேகமாக செல்லக்கூடிய ஒரு அழகான பாதையை அதிவேக நெடுஞ்சாலை என இருக்கும் அதுபோலதான் இவ்வரம்பும் நம்பாதையை விட இவ்வரம்பு பறவாயில்லைதானே அதனால்தான் சொல்கிறேன். இதுதான் எமக்கு அதிவேக நெடுஞ்சாலை என்றான்.

ராகு கூறிய அதிவேக நெடுஞ்சாலையை கடந்து மீண்டும் மணற்பாதையை அடைகின்றோம். நாங்கள் பாடசாலைக்கு மிகவும் கஸ்ரப்பட்டு செல்வதை எண்ணிப்பார்த்து எனக்குள் சிந்திக்கின்றேன். ராகுவின் மாமா கூறியது போல குடத்திற்குள் விளக்காய் இருக்கும் எங்கள் ஊரை எதிர்காலத்தில் பலரும் அறியும்படி செய்ய வேண்டும் என்றும் எதிர்காலத்தில் இவ்வூர் ஒரு கல்வி அறிவு கூடிய ஊராகவும் இருக்க வேண்டும் என்றும் எதிர்கால சந்ததியினருக்காகவது பாடசாலையை தவிர்ந்த ஒரு கற்றல் நிலையம் கிடைக்கும் வேண்டும் என்று சிந்ததித்துப் பார்க்கின்றேன்.

**ப.தசாரினி (தரம் - 11)**

# யோகா என்பது எதற்கு?

இன்றைய நாகரீக உலகம் வன்முறை மிகுந்த உலகமாக மாறிவிட்டது. அதில் மனிதன் தன்னுடைய அகவாழ்க்கையை மறந்துவிட்டு புறவாழ்க்கையில் முற்றிலுமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டுவிட்டான்.

மிக அதிகமான மருந்துகளையும், நச்சுப்பொருள் கலந்த உணவுகளையும் பயன்படுத்தி இயற்கையின் விதிமுறைக்கு மாறாக தானே தன் உடலை பாழ்படுத்திக்கொண்டிருக்கின்றான். இவ்வுலக இன்பங்களை ஓர் வரையறைக்குக்கட்டுப்பட்டு அனுபவிக்கலாம் அளவுக்கு மீறிய நிலையில் மனம்போன போக்கில் அனுபவிப்பதாலேயே நம் உடல் நலம் கெட்டுவிடுகிறது.

இந்த உலகம் ஒரு இயந்திர உலகமாக மாறி வருகிறது. அதில் மனிதன் மெல்ல மெல்ல இரு இயந்திரமாக மாறி வருகிறான். நவீன விஞ்ஞானத்தின் மூலம் தன்பழுதுபட்ட நுரையீரல்கள், இதயங்களுக்கு பதிலாக இரும்பு நுரையீரல்கள் ப்ளாஸ்டிக் இதயங்கள் என்று பொருத்திக்கொண்டு விஞ்ஞாத்தின் அடிமையாக வாழ்ந்து வருகிறான். இந்நிலையை மாற்றத்தான் மனிதனுக்கு யோகா தேவைப்படுகிறது.

உண்மையான ஆரோக்கியத்தையும், குறைந்த உணவில் நிறைந்த சக்தியையும் யோகாசனங்கள் தருகின்றன. யோகாசனங்களைத் தவறாமல் செய்து வருபவர்களுக்கு வியாதி அணுகவே அணுகாது.







ஜனாதிபதியின் நாட்டிற்காக ஒன்றிணைவோம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் யோகாசன நிகழ்வு நடைபெற்ற போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

## கொல்லநுலை இளைஞர் கழகம் தேசியமட்ட போட்டிக்கு தெரிவு



மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்சேவைகள் மன்றம் நடாத்திய மாவட்ட மட்ட கயிறு இழுத்தல் போட்டியில் முதலிடத்தினையும், வலைப்பந்தாட்டம், கபடி ஆகிய போட்டிகளில் இரண்டாம் இடத்தினையும் பெற்று கொல்லநுலை விவேகானந்த இளைஞர் கழகம் சாதனையை நிலைநாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சாதனைகளை ......**

கொல்லநுலைப் பாடசாலை பல்வேறு தேவைகளைக் கொண்டு காணப்படுவதாக அதிபர் குறிப்பிட்டார். அதற்கமைய அத்தேவைகளில் எம்மால் நிறைவேற்றக்கூடியவற்றை செய்து தருகின்றேன். இப்பாடசாலையில் சிலபாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இத்தேவையில், விஞ்ஞானம், ஆரம்பக்கல்வி ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களை இரண்டாம் தவணை ஆரம்பத்தில் வழங்குவோம். அண்மைக்காலங்களாக கொல்லநுலைப் பாடசாலை சிறப்பான சாதனைகளை புரிந்து வருகின்றது. அண்மையில் கூட நடைபெற்ற கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையிலும் 71வீதமான சித்தியினைப் பெற்று சாதனைப்படைத்துள்ளமை மிகவும் வரவேற்கத்தக்கது.

யோகாசன நிகழ்வினை அற்புதமாக நிகழ்த்தியிருக்கின்றீர்கள், தெரிவுசெய்யப்பட்ட யோகா காட்சி மிகவும் சிறப்புக்குரியது. மாணவர்கள் சிறப்பாக யோகாப் பயிற்சியைச் செய்தார்கள். சிறப்பானதொரு பேச்சினை மாணவி மாணவி நிகழ்த்தினார். என்றார்.



2ம் தவணைப் பாடசாலை ஆரம்பிப்பதை முன்னிட்டு பாடசாலையில் நடைபெற்ற சிரமதானப்பணியின் போது....




2ம் தவணைப் பாடசாலை ஆரம்பிப்பதை முன்னிட்டு பாடசாலையில் நடைபெற்ற பாதுகாப்புகுழுக்கூட்டத்தின் போது....





தரம் 11 மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினை அதிகரிக்கச்செய்வதற்காக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தினால், பாடசாலையில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது...




சித்திரைப்புத்தாண்டு நிகழ்வு பாடசாலையில் நடைபெற்ற போது....

# கடந்த காலத்தில் வெளியாகியிருந்த பத்திரிகைச் செய்திகள்

## கொல்லநுலைப் பாடசாலையில் யோகாசன நிகழ்வு















நாட்டுக்காக ஒன்றிணைவோம் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கிணங்க, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் யோகாசன நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் சா.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிறிதரன், கணக்காளர் ஏ.சிவகுமார், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களான முருகேசபிள்ளை, ந.தயாசீலன் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். இதன்போது, மாணவர்கள் யோகாசனப்பயிற்சிகளில் ஈடுபட்டதுடன், யோகாசனம் தொடர்பிலும் கருத்துக்களை முன்வைத்தனர். மேலும் குழு முறையிலான யோகாசன காட்சிகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

(பட்டிப்பளை நிருபர்)

**அரங்கம்**

## கொல்லனுலைப் பாடசாலையில் யோகாசன நிகழ்வு



படுவான்கரை நிருபர்)

நாட்டுக்காக ஒன்றிணைவோம்' ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கிணங்க, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லனுலை விவேகானந்த வித்தியாலயத்தில் யோகாசன நிகழ்ச்சி கடந்த (10) புதன்கிழமை இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் சா.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.சிறீதரன், கணக்காளர் ஏ.சிவகுமார், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களான முருகேசபிள்ளை, ந.தயாசீலன் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது, மாணவர்கள் யோகாசனப் பயிற்சிகளில் ஈடுபட்டதுடன், யோகாசனம் தொடர்பிலும் கருத்துக்களை முன்வைத்தனர். மேலும் குழுமுறையிலான யோகாசன காட்சிகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

## தேசியமட்ட விளையாட்டுக்கு கொல்லநுலை இளைஞர் கழகம் தெரிவு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட மாவட்ட விளையாட்டு நிகழ்வுகளில் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில், பிரதேசமட்ட போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்ற, கொல்லநுலை ஸ்ரீ விவேகானந்த இளைஞர்கழகம் இரு போட்டிகளில் வெற்றி பெற்று, தேசியமட்ட போட்டிக்கும் தெரிவாகியுள்ளது.

மட்டக்களப்பு மாமாங்கம் மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் முதலிடத்தினைப்பெற்று தேசியமட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளதுடன், பெண்களுக்கான வலைப்பந்து போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளது. மேலும், வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலிடத்தினை வந்தாறுமூலை திருவ்ணா விளையாட்டுக்கழகம் பெற்றுக் கொண்டு தேசியமட்டத்திற்கு தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





இதழ் - 14 10 அரங்கம்

## ஒரு முழுக்கிராமத்து மக்களின் பற்களில் காவிபடிந்த வேதனை நீரினால் ஏற்பட்ட விபரீதமோ? பரிசோதிக்க முன்வருவார்களோ??

படுவான் பாலகன்





## கிழக்கு தந்தி

## கொல்லநுலைப் பாடசாலையில் யோகாசன நிகழ்வு





**படுவான்கரை நிருபர்**

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கிணங்க, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் யோகாசன நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் சா.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.சிறீதரன், கணக்காளர் ஏ.சிவகுமார், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களான முருகேசபிள்ளை, ந.தயாசீலன் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது, மாணவர்கள் யோகாசனப் பயிற்சிகளில் ஈடுபட்டதுடன், யோகாசனம் தொடர்பிலும் கருத்துக்களை முன்வைத்தனர். மேலும் குழுமுறையிலான யோகாசன காட்சிகளும் காட்சிப்படுத்தப்பட்டன.



அரங்கம்

படுவான்கரை மாணவர்களது தேசிய மட்டச் சாதனை

சமூக விஞ்ஞானத்தில் சாதனை நிலைநாட்டிய இளம் விஞ்ஞானிகள்

படுவான் பாலகன்

வசதிகள், வளம் இன்றி சாதித்துக் காட்டிய வீரர்கள்

சிறுநீரகம் தேவை

மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 36 வயதுடைய பெண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ(O) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபர் மிகுந்த உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு : 077-9912867



அரங்கம்

படுவான் திசையில்

இயற்கையோடு இயற்கையாக வாழ்தல்

படுவான் பாலகன்

# தலைகுனிந்த நாள்!



பிள்ளைப்பருவம் – அது
எள்ளி நகையாடிய காலம்
புத்தகப் பையுடன்
துள்ளிக்குதித்த நிமிடம்!

எழுந்து குளித்து
ஏழரைக்குள் பாடசாலை வாசல்
சக நண்பர்களுடன்சகவாசம்
வேலைசெய்யும் பிள்ளைகளுடன் வெற்றுப்பேச்சு!

முதலாம் பாட மணியோசை – என்
குரங்குச் சேட்டை ஆரம்பம்
வாத்தியாரின் கண்டிப்பு — நான்
வாய்திறக்கா அமைதி

பாடத்தில் கவனமில்லை
படிப்பிப்பவரின் முகம் தெரிகிறது
மனம் எங்கெங்கோ அலைகிறது
என்னென்னவோ தோன்றுகிறது

சட்டொன்றொரு வினா
சடுதியாய் எழுந்து நிற்கின்றேன்
கேட்டதும் விளங்கவில்லை
கேலியாய் சிரிப்பொலிகள்

காலங்கள் கடந்தன
சாதாரணதரப்பரீட்சையும் ஆரம்பம்
பள்ளியைவிட்டு அகல்கின்ற நாள்
பாலர் வகுப்பில் பழகியவரையும் பிரியும் நேரம்

கையில் ஒருவனை பிடித்தவனாய்
பிரதேச செயலக அலுவலகத்தில்
கரத்தில் விண்ணப்பத்துடன்
பூ ர்த்திசெய்து தாருங்கோ!

என்னடா என்கிறான்?
உரிமையோடு ஒருத்தன்!
கையைப்பற்றுகிறான் சுகம் விசாரிக்கின்றான்
வேறுயாருமில்லை பள்ளி நண்பந்தான்!

தலைநிமிர மனம் இடங்கொடுக்கவில்லை
பேசுவதற்கும் வார்த்தை வரவில்லை
வாறேன் என்றேன் வந்துவிட்டேன்!
என்னவென்று நினைத்தானோ?

பாடசாலைப்பருவத்தில் தலைநிமிர்வு
நண்பன் முன்னிலையில் தலைகுனிவு
வாத்தியாரின் உபதேசம் உறைக்கும் நேரம்
நீர்சொட்டலுடன் வெளியேறிய தருணம்.

**- வ.துசாந்தன் -**

# மொழித்திறனில் பின்னடைவான மாணவர்களுக்கான பரிகாரக்கற்பித்தல் உத்திகள்

மாணவரின் எதிர்காலம் நான்கு சுவர்களைக் கொண்ட வகுப்பறையிலே தீர்மானிக்கப்படுகிறது. வகுப்பறை என்ற கட்டடத்தின் உள்ளே அவர்கள் பெறுகின்ற அறிவு, திறன், மனப்பாங்கிலான நடத்தை மாற்றங்கள் வாழ்வின் பல கட்டங்களில் சோதிக்கவும், சாதிக்கவும் தூண்டுகின்றன. எதிர்கால சமூக மாற்றங்களுக்கு முகம் கொடுக்க கூடியவராகவும், நற்பிரசையாகவும் உருவாக்குவதே கல்வியின் இலக்கு. உறுதிமிக்க அத்திவாரமே உறுதி மிகுந்த கட்டடத்தை உருவாக்கும். அத்திவாரம் பிழைத்தால் அந்தக்கட்டடமே பாழ்தான். இதே போன்றுதான் ஒரு பிள்ளையின் வாழ்நாள் முழுவதுமான கல்விக்கு அத்திவாரமாகவும், அடிப்படையாகவும் அமைவது ஆரம்பக்கல்வி. இவ்வாறான ஆரம்பக்கல்வியை அத்திவாரமாகவும், கற்பிக்கும் ஆசிரியரை தாங்கி நிற்கும் தூணாகவும் ஒப்பிடலாம். இவற்றில் விடப்படும் தவறுகள் மாணவரின் கற்றலை வெகுவாக பாதிப்படையச் செய்கின்றன.

ஆரம்பக்கல்வியிலே தான் மாணவரின் அடிப்படைத்திறன்கள் கட்டியெழுப்பப்படுகின்றது. கற்றல், கற்பித்தலில் முதன்மையான நோக்கம் மாணவர்களிடத்து மொழித்திறனை வளர்ச்சியடையச் செய்தல். கேட்டல், பேசுதல், வாசிப்பு, எழுத்து என்பன ஒரு மொழியின் அடிப்படைத்திறன்கள். மொழிசார் கற்றலை மூவகையாகப்பிரிக்கலாம்.

1. **மொழிக்கற்றல் :—மொழியின் அடிப்படைத்திறனைக் கற்றல்.**
2. **மொழியைப்பற்றிக்கற்றல்:— மொழியின் இலக்கண, இலக்கியங்களைக் கற்றல் (அமைப்பு, இயல்பு)**
3. **மொழிவழிக்கற்றல் :—மொழியை ஊடகமாகக் கொண்டு பிற பாடங்களைக் கற்றல்**

ஆரம்பக்கல்வியில் அடிப்படைத்திறன்களை சீராகப்பெறாத, கற்றலில் பின்னடைவான மாணவரின் மொழித்திறன் குறைவாக இருக்கின்றது. இதனால் அடிப்படைத் தேர்ச்சிகளில் பின்னடைவான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். குறிப்பாக எழுதுதல், வாசித்தல் திறனில் பின்தங்கியவராகக் காணப்படுகின்றனர். ஆரம்பப்பிரிவில் கரும்பலகையில் ஆசிரியர் எழுதுவதைப் பார்த்து எழுதப்பழகியவர்கள் இடைநிலைப்பிரிவில் ஆசிரியர் கூறுவதைக் கிரகித்து எழுதவும், தாமாகவே சிந்தித்து எழுதத் தெரியாதவர்களாகவும், எழுத்துக்கூட்டி வாசிப்பவர்களாகவும், சொற்கூட்டி பொருளறிந்து ஒலி வேறுபாடுகளை நிறுத்தக்குறியீடுகளை அனுசரித்து வாசிக்க முடியாதவர்களாகவும் உள்ளனர்.

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை தான் வாழும் சூழலுக்கேற்ப தாய்மொழியைக் கற்றுக்கொள்கிறது. குடும்பம்இசமூகம் என்பவற்றின் ஊடான உரையாடலின் மூலம் கேட்டல், பேசுதல் என்ற திறனை வளர்த்துக்கொள்கிறது. தான் பெறும் அனுபவங்களின் மூலம் எண்ணக்கரு விருத்தியையும் பெறுகிறது என்கிறார் உளவியலறிஞர் ஜீன் பியாஜே. குடும்பம்,முன்பள்ளிக்கல்வி என்பவற்றின் மூலமாக ஓரளவு எழுதுதல், வாசித்தல் திறனையும் பெற்றுகொள்கிறது. சூழல், பரம்பரை,தனியாள் வேறுபாடு,நுண்ணறிவு என்ற காரணிகளால் மாணவர்களிடையே அடிப்படைத்திறனை வளர்த்துக்கொள்வதில் வேறுபாடுகளும் உண்டு. இவ்வாறான நிலையில் மாணவர்கள் கல்விக்கான முதலடியை ஆரம்பக்கல்வியில் வைக்கின்றனர். கல்லை உளியின் துணையால் சிற்பமாக்கும் சிற்பி போல ஆசிரியரும் கற்பித்தலின் துணையால் மாணவரை சிறந்தவராக படைக்கிறார் எனலாம். **ஆசிரியர் என்பவர் கற்றதைக் கற்றுக்கொடுப்பவர் என்பதுடன் கற்றலுக்கான சூழலை உருவாக்கி அதற்கான பயிற்சி அளிப்பவர். ஆசு என்பது குற்றம் எனவும் இரியர் என்பது களைபவர் எனவும் பொருள்படும்.** குற்றங்களை களைபவராக ஆசிரியர் விளங்குகிறார். தவறுகளை களைவதன் மூலம் சரியான பாதையில் பயணிப்பது இலகுவாகுகிறது.

**திருமதி. பத்மினி ஜெயதீசன்**
**ஆசிரியை**
**மட்/மமே/கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம்.**

மாணவர்மையக்கல்வியில் நிலைமாற்று வகிபாகத்தை ஆசிரியர் பெறுகிறார். மாணவரின் நிலையை மாற்றுதல் என்ற பணியை ஆசிரியர் செய்கிறார். எழுத்தறிவித்தவன் இறைவன் என்ற கூற்றுக்கேற்ப தெய்வத்திற்கும் முன்னாக குரு வைக்கப்படுகிறார். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் . கண்ணுக்கு ஒப்பான இவற்றை ஒரு பிள்ளைக்கு கற்றுக்கொடுப்பவர் அப்பிள்ளைக்கு கடவுள். இதனாலேயே ஆரம்பக்கல்வி ஆசிரியரை எம்மால் மறக்க முடிவதில்லை. எனினும் கடமையை கடைமைக்கு செய்யும் ஆசிரியரும் எம்மத்தியில் உள்ளனர். இதனால் அடிப்படைத்திறனில் பின்னடைவான மாணவராக இடைநிலைக்கல்விக்கு அனுப்பப்படுகின்றனர். இடைநிலைக்கல்வியில் ஒன்றிணைந்த கலைத்திட்டம், தேர்ச்சி மையக்கலைத்திட்டம், செயற்பாட்டுக்கல்வி, போன்ற கல்விசார் இலக்கு, நோக்கங்களில், கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் மாற்றம் கொண்டு வரும் போது, மொழித்திறன் குறைவான மாணவரால் ஈடு கொடுக்க முடியாது பாடசாலையில் இருந்து இடைவிலகிக் கொள்கின்றனர். இதற்கான அடிப்படைக்காரணம் தன்னால் எழுத, வாசிக்க முடியாது என்ற தாழ்வு மனப்பான்மையே. இதற்கு பொறுப்பாளி மாணவருக்கு கற்பித்த ஆரம்பக்கல்வி ஆசிரியரே.

ஒரு வகுப்பறையில் மீத்திறன் கூடியோர், சாதாரணமானோர், மெல்லக்கற்போர் என்ற பல்வகையில் மாணவர் காணப்படுகின்றனர். எனினும் ஆசிரியர் மூவருக்கும் ஏற்றவகையில் பாகுபாடு காட்டாது கற்பிக்க வேண்டிய பொறுப்புடையவர். எனினும் பாடச்சுமை, வேலைப்பளுவை காரணமாக்கி தனியாள் வேறுபாட்டிற்கேற்ப கற்பிக்கவும், பின்னடைவான மாணவருக்கான பரிகாரக் கற்பித்தலையும் மேற்கொள்ளாது குறிப்பிட்ட மாணவர்களை இலக்கு வைத்து கற்பிக்கின்றனர். பரீட்சை பெறுபேறுகளின் உயர்ச்சி, வீழ்ச்சிக்கு பொறுப்புடையவராகவும் உள்ளனர். எனினும்

சித்தியடைபவர்கள், சித்தியடையமாட்டார்கள் என்ற கருத்துக்கணிப்பில் கற்பித்தலை பாரபட்சமாகவும் மேற்கொள்கின்றனர். பெறுபேறுகள் வெளியான பிற்பாடு சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களையே தனது மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர் என்று மகிழ்ந்து பெருமைப்படும் அதேவேளை, தன்னிடம் கற்ற சித்திபெறாத மாணவர் குறித்து பேசுவதையோ, அவர்கள் குறித்தும் கவலைப்படும் மனப்பாங்கோ இல்லை.

**மாணவர் சித்தியடைந்ததற்கு தான் காரணம் என்று எண்ணும் ஆசிரியர் சித்தியடையாமைக்கு தானும் ஒரு காரணம் என எண்ண மறுக்கிறார்.**

ஆசிரியர்கள் ''ஆசிரியர் பணி அறப்பணி அதற்குன்னை அர்ப்பணி.'' என்ற மனப்பாங்கை வளர்த்துக்கொண்டு விருப்புடன் செயலாற்ற வேண்டும். சமூகத்தினால் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கு வகை கூறும் வகையில் வினைத்திறனான, விளைதிறனான வெளியீடுகளை வெளிப்படுத்த வேண்டும். எழுதத்தெரியாதவர், வாசிக்கத்தெரியாதவர் என்ற வகைக்குள் உள்ளடங்கி நிற்போரும் எம் பிள்ளைகள் என்பதனை அனைத்து ஆசிரியரும் உணரவேண்டும். அவர்களை ஒதுக்கி கற்பித்தலை மேற்கொள்ளக்கூடாது. அவர்கள் முன்பாக எழுத தெரியாதவர், வாசிக்கத்தெரியாதவர் எனக்கூறுவதனால் ஏனைய மாணவரும் கிண்டல் செய்வர். இதனால் உளவியல்ரீதியாக பாதிக்கப்படுவர். தன்னை குறித்த தாழ்வு மனப்பான்மையையும் ஏற்படுத்திக்கொள்வர். இதனால் கற்றலை கசப்பானதாக உணர்வர்.

கேட்டல், பேசுதல் போன்ற திறனிலும் தன்னை ஈடுபடுத்தாது பின்னடைகின்றனர். ஆசிரியர்கள் வகுப்பறையில் வாசிக்க செய்யும் போது இவ்வாறான மாணவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். ஒன்றுகூடலில் நற்சிந்தனை கூறச்செய்தல் வேண்டும். ஏனைய மாணவரின் உதவியை பெற்றுக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். பயிற்சி கொப்பியை பார்வை செய்து பின்னூட்டலை வழங்கவேண்டும். மொழித்திறன் குறைவான மாணவர்கள் மீது தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர் மாத்திரம் கவனம் எடுப்பதை விட அனைத்து ஆசிரியரும் கவனம் எடுக்கும் போது ஆசிரியர்கள் தன்னை கண்காணிக்கின்றார்கள் என்ற எண்ணம் தோன்றும். இதனால் கற்றலில் விருப்புடன் ஈடுபாடுவார். இவ்விருப்பினால் எழுத்தாற்றலை வளர்த்துக்கொள்ள முயற்சி எடுத்து அதற்கான பயிற்சியை ஆசிரியரிடம் பெற்றுக்கொள்வார்.

மொழித்திறனை விருத்தி செய்வதற்கான கற்பித்தல் வழிவகைகள்:-

அடிப்படைத்திறனில் இடர்படும் மாணவருக்கான பரிகாரக்கற்பித்தலை சில உத்திகளைக் கையாண்டு மேற்கொள்ளும் போது மாணவரிடத்து நிரந்தர நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தலாம். **பரிகாரக்கற்பித்தல் என்பது மொழித்திறனில் பின்னடைவான மாணவர்களுக்கு ஆசிரியரினால் திட்டமிடப்பட்டு வழங்கப்படுகின்ற பயிற்சி.** பரிகாரக்கற்பித்தலை மேற்கொள்ளும் முன்பு மாணவர்களை எவ்விடயம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்போகிறேன் என்பதனை ஆசிரியர் திட்டமிட்டு, அதற்கான தேர்ச்சிமட்ட கணிப்பீட்டினை தயாரிக்க வேண்டும். அதனை அடியொற்றி பின்னடைவான மாணவர்களை தெரிவு செய்து அதற்கான பரிகாரங்களை கற்பித்தலின் உத்தி வழியாக கற்பித்தல் சிறந்தது.

காட்சிப்பொருளில் இருந்து கருத்துப் பொருளைக்கற்பித்தல், அறிந்ததைக் கொண்டு அறியாததைக் கற்பித்தல், முழுமையில் இருந்து பகுதியை கற்பித்தல், எளிமையில் இருந்து கடினமாதைக் கற்பித்தல். என்ற படிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். இதன்போது பின்வரும் கற்பித்தல் உத்திகளை ஆசிரியர் கையாளவேண்டும்.

1. அனுபவவழிக்கற்பித்தல்
2. செயல்முறைக்கற்பித்தல்
3. காட்சிப்படுத்தி கற்பித்தல்
4. தொடர்புபடுத்தி கற்பித்தல்
5. விளையாட்டு மூலம் கற்பித்தல்
6. ஆக்கத்திறன் வெளிப்பட கற்பித்தல்
7. நவீன கற்றல்- கற்பித்தல் சாதனங்களை கையாண்டு கற்பித்தல்

### கேட்டல் திறன்

நான்கு வகைத்திறன்களில் கேட்டல் திறனே முதன்மையானது. ''செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை''(குறள்:157) என்றார் திருவள்ளுவர்.ஆசிரியர்கள் வாசிக்கும் போது மாணவரைத் தன்வயப்படுத்தி எளிமையான சொற்களைச் சொல்லும் போது செவிமடுத்து கேட்பார்கள். மாணவரின் புரிதல் திறனுக்கேற்ப பாடல் பாடியோ, நடித்துக் காட்டியோ, படங்களைக் காட்சிப்படுத்தியோ, பல்லூடக எறிகருவி, ஒலிநாடா வழியில் கற்பிக்கும் போது மாணவர் விருப்புடன் கேட்பார்கள். மாணவர்கள் வினாக்களை கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். பந்தியியையோ, சிறுகதையினையோ பாடவிடயம் சார்பாகவோ வாசித்துக்காட்டி கிரகித்து பிரதான கருத்தை கூறச்செய்தல். வினாக்கேட்டு விடையளிக்கும் வகையில் பயிற்சி வழங்க வேண்டும். வினாவிடை போட்டிகளை நடாத்துவதன் மூலம் வினாகேட்கும், விடைகூறும் தன்மையை வளர்த்துக்கொள்வர். சினிமாப்பாடல்கள் மாணவர் மனதில் மனனம் செய்யப்படும் அளவிற்கு பாடவிடயங்கள் மனனம் செய்யப்படுவதில்லை. இதற்கான காரணம் சினிமாப்பாடலில் உள்ள இசை. அது இடம்பெறும் சூழல்,காட்சிக்கேற்ப மாணவர் பாடலின் பொருளையும் கதையையும் கூறுகின்றனர். இதன் வழியில் செய்யுளைக் கற்பிக்கும் போது இலகுவாக கற்க முடியும்.

### பேச்சு திறன்

எழுத்தாற்றல் உள்ளவர்களும் பேச்சாற்றலில் சிரமப்படுவதைக் காணலாம். வாசிப்புப்பழக்கம், கற்பனைத்திறன் உள்ளவர்களால் சரளமாக பேசமுடிகிறது. வகுப்பறையில் கேட்டலுக்கான சந்தர்ப்பம் அதிகம் அதே போன்று

பேசுவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்க வேண்டும். படம் பார்த்து கதை கூறல் போன்ற செயற்பாடுகளையும்,சிறுகதையினைக் கூறி அதனை நிறைவு செய்தல் போன்ற பயிற்சிகளை வழங்க வேண்டும். பேச்சுப்போட்டிகளை நடாத்த வேண்டும். பாவனை செய்து பேசுவதற்கும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். ஒரு தலைப்பை கொடுத்து அது தொடர்பான சமர்ப்பிப்புக்களை(presentation) முன்வைக்கச் செய்யும் போதும், விவாதப் போட்டிகளை வைக்கும் போதும் மாணவரின் சிந்தனை, கற்பனைத்திறன் தூண்டப்படுவதால் பேச்சாற்றல் வளர்க்கப்படும். ஒன்றுகூடலில் நற்சிந்தனை கூறுவதற்கும் மாணவரை பயிற்றுவிக்க வேண்டும்.

**வாசிப்புத்திறன்**

எழுத்துக்களை இனங்காணல், சரியாக ஒலி வடிவத்தில் உச்சரித்தல், பொருள் புலப்பட வாசித்தல், நிறுத்தக்குறிகளை அனுசரித்து வாசித்தல், ஏற்ற இறக்கங்களுக்கேற்ப வாசித்தல் என்பன வாசிப்புத்திறனில் அவதானிக்கப்பட வேண்டியவை. படம் பார்த்து பெயரைக்கூறல், சிறுகதைப்புத்தகம், நாளிதழ் என்பவற்றை வாசிக்கச் வழிப்படுத்த வேண்டும். இவை வாசிப்பின் மீதான விருப்பத்தை உண்டாக்கும். **பகிர்ந்து வாசித்தல்** போன்ற செயற்பாட்டை அதிகம் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் வாசிப்பை தூண்டுவதுடன் குழுவாக இணைந்து வாசிக்கும் போது தொடர்ச்சி எவ்வாறு அமையும் என்ற எண்ணம் கற்பனையை வளர்க்கும். பிறர் வாசிக்கும் போது உச்சரிப்பு,தொனி என்பவற்றை அவதானிப்பர். இதற்கான ஆர்வமான நூல்களை தேர்தெடுக்க வேண்டும். வகுப்பறையில் வாசிப்புத்திறனில் இடர்பாடுகளை எதிர்கொள்வோரை அதிகமாக வாசிக்க வைத்தல் வேண்டும்.

**எழுதுதல் திறன்**

ஏனைய மூன்று திறன்களின் செல்வாக்கும் எழுத்தில் வெளிப்படும். எழுத்தற்றால் என்பதே மாணவருக்கு அதிகம் வேண்டும். பரீட்சையில் எவ்வாறு விடை எழுதுகிறார்கள் என்பதற்கேற்ப புள்ளிகள் வழங்கப்படுகிறது. தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடத்தில் எழுத்தாற்றலே மாணவனின் புள்ளியை தீர்மானிக்கிறது.
எழுதும் போது எழுத்தை தெளிவாகவும்,நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டும் எழுத வேண்டும். வகுப்பறையில் பிரதிபண்ணல், உறுப்பமைய எழுதுதல் போன்ற பயிற்சிகளை வழங்க வேண்டும். பயிற்சி கொப்பிகளை திருத்தும் போது ஆசிரியர் எழுத்துப்பிழைகளை அடையாளப்படுத்தி திருத்த வேண்டும். எழுத்தாற்றலை வளர்க்கும் வகையில் சிறுகதை, கட்டுரை,சுயசரிதை,பாடல் இயற்றல், கவிதை எழுதல் ஊக்குவிக்க வேண்டும். வாசிப்பு பழக்கத்தை மாணவரிடத்து ஊக்குவிக்கும் போது எழுத்தாற்றல் இயல்பாகவே வளர்ச்சியடையும்.

**மொழித்திறன் குறைவான மாணவருக்கான பரிகாரக்கற்பித்தல் உத்திகள்.**

ஒரு எழுத்தினது வரிவடிவத்தையும் ஒலி வடிவத்தையும் இனங்காணச் செய்வதே மொழித்தேர்ச்சியின் அடிப்படை எனலாம். பேசும் போதும் கேட்கும் போதும் ஒரு எழுத்து எவ்வாறு உச்சரிக்கப்படுத்திறது என்பதனை ஓரளவு புரிந்து கொள்ள முடியும் எனவே இதற்கான பயிற்சியை வழங்கவேண்டும். அவர்களை கவரும் வகையிலான பாடல், சிறுகதைகளை பல்லூடக எறிகருவியின்,கணினியின் உதவியுடன் ஒலி, ஒளி வடிவில் கேட்பதற்கும், பார்ப்பதற்கும் ஒழுங்குசெய்து கொடுக்க வேண்டும். இது மாணவர் மனதில் நீண்டகாலம் நிலைத்திருப்பதுடன் எழுத்துக்கள் உச்சரிக்கப்படும் முறையையும் எளிதாக அறிந்து கொள்வர். ஒரு எழுத்தினது வரிவடிவத்தை எழுதிக்காட்டி அதற்கு மேலே மீண்டும் மீண்டும் எழுதுவதுடன் அதற்கான ஒலி உச்சரிப்பையும் கூறியவாறு எழுதப்பயிற்சியளிக்க வேண்டும். எழுதிப்பழகிய எழுத்தின் வரிவடிவத்தினை இனங்கண்டு வட்டமிடுவதற்கான பயிற்சியை வழங்குவதற்கு நாளிதழைப் பயன்படுத்தலாம். வரியொற்றி தேடி வட்டமிடுவதற்கு வழிப்படுத்த வேண்டும் இதனால் ஏனைய எழுத்தினது வரிவடிவத்தையும் இனங்கண்டு கொள்ளமுடியும்.

குறியீடுகளால் எழுத்துக்கள் பெறும் மாற்றங்களையும் அதனால், உச்சரிப்பில் ஏற்படும் வேறுபாட்டையும் உணரச்செய்ய வேண்டும். ‘க’எனும் எழுத்து குறியீடுகளால் க்,கா,கி,கீ…. என மாறுவதனையும் இதே போன்று ஏனைய எழுத்துகளும் மாறும் என்பதனை கற்றுக்கொடுக்க வேண்டும். உயிர்மெய் எழுத்துக்களை சரியாக கற்றுக்கொள்ளாததால் எழுத்துப்பிழை, வாசிப்பதில் சிரமம் ஏற்படுகின்றது. உயிர்மெய் எழுத்துக்கள் எனும் போது மெய்யும் உயிரும் சேர்ந்தது என்பதனையும் அவற்றை பிரிக்கும் முறையினையும் இலகுவாகக் கற்றுக்கொடுத்து வேண்டும். மாணவர்களை இரண்டு குழுக்களாகப்பிரித்து மெய்யெழுத்து, உயிரெழுத்து என இரண்டாகப்பிரித்து எழுத்துக்களின் வரிவடிவத்தினைக்காட்டி வினாவிடை முறையில் பாடலாக உருவாக்கி கற்பிக்கலாம். **க் கும் அ சேர்ந்தால் என்ன வாகும்(க்+அ) என கேட்க ‘க’வாகும்** என விடைகூறும் முறையில் பயிற்றுவிக்க வேண்டும். இதனால் எழுத்தினது வரிவடிவம், ஒலிவடிவம், கூட்டெழுத்து என்பவற்றின் வழியாக உயிர்மெய்யெழுத்துக்களையும் இலகுவாக கற்றுக் கொள்வர். செயலட்டைகளின் மூலம் விளையாட்டுகளின் மூலமாகவும் எழுத்துக்களை இனங்காணல், உச்சரித்தல்,சரியான வரிவடிவத்தில் எழுதும் பயிற்சிகளை வழங்கலாம்.
எழுத்துக்களின் ஒலி வடிவத்தில் கூடியளவு பயிற்சியளிக்க வேண்டும். மம்,ம்ம,ப்ப,பப்,ம்மா,ப்பா, அம்மா-அப்பா என உச்சரிக்கப்படும். இவ்வாறு எழுத்துகளை ஒப்பிட்டு கற்பிக்கும் போது ஒத்த ஓசையுடைய எழுத்துக்களை அவர்களால் இலகுவாகக் கண்டு கொள்ள முடிகிறது. ஓரெழுத்துச் சொற்களைக் கற்றுக் கொண்ட பின்பு ஈரெழுத்துச்சொற்களை கண்டுபிடிப்பதற்கு வழிபடுத்த வேண்டும். ‘அடி’என்ற ஈரெழுத்து சொல்லை எடுத்துக்காட்டி இது போன்று ஒலிக்கும் சொற்களை கூறச்செய்வதன் மூலம் சொற்களை உருவாக்கும் திறனை வளர்த்துக்கொள்வர். இதனை அடியொற்றி ஆடி என்ற சொல்லை அறிமுகப்படுத்தி குறில், நெடில் ஓசையுடைய எழுத்துக்களையும் கற்பதற்கு தூண்ட வேண்டும். சொற்கூட்டங்களுள் இருந்து ஈரெழுத்து, குறில் நெடில் சொற்களை இனங்காண்பதற்கான பயிற்சிகளை வழங்க வேண்டும். **“சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்”.** என்பதற்கிணங்க பேச்சுக்கு அழகு தெளிவான உச்சரிப்பு ல,ள,ழ,ந,ன,ண,ற,ர என்பவற்றின்

உச்சரிப்பினை வெளிப்படுத்தும் சித்திரங்களைக் காட்சிப்படுத்தி அதற்கான சொற்களை காட்சிப்படுத்தி நாவின் அமைப்பிற்கேற்ப தனது நாவினால் சொற்களை உச்சரிக்க பயிற்சியளித்தல்.

மொழிப்பாடங்களில் இசையை அடிப்படையாகக் கொண்டு செய்யுளை/பாடலை கற்றுக்கொடுக்கும் போது மாணவன் அதனை மனனம் செய்யப்பழகிக் கொள்வான்.**“காக்கா கண்ணுக்கு மை கொண்டு வா…”** எனும் பாடலின் மூலமாக கற்பிக்கும் போது தனக்கு தெரிந்த சூழலில் காணப்படும் பறவைகள், அதன் நிறங்களை கூறுவதுடன் சொற்களையும், அதற்கான எழுத்துக்களையும் இலகுவாக கற்றுக்கொள்ள முடிகின்றது. பாடலை அடியொற்றியே கற்பிப்பதன் மூலம் மாணவரின் கவனத்தை ஈர்க்கலாம். மொழித்திறனை வளர்க்கும் வகையில் செயலட்டை, சொற்கட்டம், சொற்கோபுரம், குறுக்கெழுத்து, ஒலி ஓத்த ஓசை, வேறுபட்ட ஓசைச்சொற்கள், அடிப்படை சொல் வகைப்பாடு, அடிப்படை இலக்கணகூறுகளை பகுதிகளாகப் பிரித்து செயற்பாடுகளின் மூலமாகவும்

விளையாட்டுக்களின் மூலமாகவும் குழுவாக இணைந்து கற்பதற்கேற்ற வகையில் கற்பித்தல் முறைகளை மாற்றியமைக்க வேண்டும்.தொடர்பாடல் என்பது மொழிப்பாடத்திற்கு அச்சாணி. தொடர்பாடலுக்கு பயன்படும் மொழி பற்றிய அறிவு, பயிற்சி இருவருக்கும் தெரிந்ததாக இருக்கும் போதும், இருவழித்தொடர்பாடலாகவும், தடையில்லா தொடர்பாடலாகவும் இருக்கும் போது அதன் மூலம் பயனடையலாம். மொழி ஒரு திறன் பாடம் என்பதனால் அடிப்படைத்திறன்களில் மாணவர் தேர்ச்சி பெற்று இருப்பது அவசியம். மொழித்திறன் மூலமாகவே ஏனைய பாடவிடயங்களையும் கற்றுக்கொள்கின்றனர். இந்நிலையில் மொழிப்பாடத்தில் பின்னடைவான மாணவர்கள் ஏனைய பாடங்களிலும் பின்னடைவுகளை எதிர்கொள்கின்றனர். அறிவதற்காகக்கற்றல், செயலாற்றக்கற்றல், வாழக்கற்றல், இணைந்து வாழக்கற்றல் என்ற கற்றல் தூணைக்கட்டியெழுப்பி கல்வி என்ற கட்டிடத்தை பலன் வாய்ந்ததாக வடிவமைக்கும் நோக்கில உழைக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் மாணவருக்கான சிறந்த வழிகாட்டியே.

**“கற்றலைக் கரும்பாக்க வல்ல கற்றல் கலைத்தேர்ந்தவரே ஆசான்.**
**ஆசிரியர் பணி சிறக்க உரமாகி.எழுத்தறிவித்த இறைவனாக உரு மாறுவோம்.”**

‘‘முயலும் வெல்லும் ஆமையும் வெல்லும் - என்றுமே
வெல்லாது **முயலாமை”.**

---



கொல்லநுலை விவேகானந்த அறநெறிப்பாடசாலையின் ஏற்பாட்டில், கொல்லநுலை பேச்சியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற கலை நிகம்வின் போது….



ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பட்டமிடும் நிகழ்வு பாடசாலையின் மைதானத்தில் நடைபெற்ற போது….

# பட்டத்திருவிழா







